## 11. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

### 11.1. முன்னுரை

மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், உயர்கல்வி தொடர்பாக பிற மொழிகளில் இருக்கும் நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிடும் நோக்கத்துடன், “தமிழ் வெளியீட்டுக் கழகம்" 1961 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உள்ளடக்கிய தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அமைக்கப்பட்டது. இக்கழகம் பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்வது மட்டுமல்லாமல், இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற மொழி பாடநூல்களையும் அச்சிட்டு விற்பனை மற்றும் விநியோகம் செய்வதையும் கருத்திற் கொண்டு 1993ஆம் ஆண்டு “தமிழ்நாடு பாடநூல் கழகம்" என பெயரிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்யும் பணியும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதால், 2013 ஆம் ஆண்டு “தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தற்பொழுது, இக்கழகம் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்து விநியோகம் செய்துவருகிறது.

**11.2. நோக்கம்**

- 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு செறிவூட்டப்பட்ட பாடநூல்களை அச்சிடுதல்.
- பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், கால்நடை அறிவியல், சித்த மருத்துவம், மீன்வளம் மற்றும் உடற்கல்வி சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல்.
- அரிய மற்றும் பழமை வாய்ந்த தமிழ் புத்தகங்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குதல்.
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு

விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக செயல்படுதல்

### 11.3. உட்கட்டமைப்பு

இக்கழகம் சென்னை, டி.பி.ஐ. வளாகத்தில் உள்ள பத்து மாடிகள் கொண்ட தனது சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. வட்டார அலுவலர்களை தலைமையாக கொண்டு 22 வட்டார கிடங்குகள் செயல்பட்டுவருகின்றன.

### 11.4. பாடநூல்கள் விநியோகம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா பாடநூல்கள், வட்டார/மாவட்ட கல்வி அலுவலகங்கள் மூலமாக நேரிடையாக வழங்கப்படுகிறது. மற்ற தனியார் பள்ளிகளை பொறுத்தமட்டில், இணையதளம் வாயிலாக நேரிடையாகவோ அல்லது வட்டார அலுவலகங்கள் மூலமாகவோ புத்தகங்களை அவர்கள் விருப்பப்படி பெற்றுக்கொள்ளலாம். பாடநூல்களை டி.பி.ஐ. வளாகம் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள விற்பனை மையங்கள் மூலம் விற்பனை செய்வது

மட்டுமின்றி, மாணவர்கள் அவர்கள் வீட்டிலிருந்தே புத்தகங்களை பெறும் பொருட்டு உள்நுழைவு முறையை பயன்படுத்தி இணையதளம் மூலம் புத்தகங்களை அடையாறு கிடங்கிலிருந்து பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இணையதள வசதி இல்லாத தனிநபர்கள் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மையத்தின் மூலம் இவ்வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம். இணையதள வசதி மூலம் பாடநூல்கள் விநியோகிக்கப்படுவது, பள்ளிகள் மற்றும் மாணவர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

## 11.5. அச்சுப்பணி

பாடநூல்கள் நேர்த்தியான 80 GSM தாள்களை கொண்டும், அட்டைகள் லேமினேஷன் செய்யப்பட்ட 230 GSM அரா ஃபோல்ட் ப்ளு போர்டு கொண்டும் அச்சடிக்கப்படுகிறது. மாணவர்கள், தொடர்புடைய பாடப் பொருள் உள்ளடக்கிய ஒலி-ஒளிக் காட்சிகள் மற்றும் இணையதள வினா வங்கி விவரங்களை காண்பதற்கு ஏதுவாக விரைவுத் துலங்கல் குறியீடு (QR

Code) என்ற சிறப்பு அம்சத்துடன் செறிவூட்டப்பட்ட பாடநூல்கள் அச்சிடப்பட்டுவருகிறது.

2019-20 ஆம் ஆண்டுக்கான பாடநூல்கள் மற்றும் பிறநூல்கள் அச்சிடுதல் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணையிடப்-பட்டுள்ளன:-

***அ) பாடநூல்கள்***

| பாடநூல்களின் விவரங்கள் | அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்த மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள். | 568.00 | 294.00 |
| சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் | 227.00 | 228.65 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான தமிழ் பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 9.55 | 9.62 |

*ஆ) பிற நூல்கள்*

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், பெற்றோர் ஆசிரியர் கழகம், சென்னை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் இயக்கம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் போன்ற பிற துறைகளுக்கு ரூ.10.53 கோடி மதிப்பீட்டில் 48.26 இலட்சம் நூல்களை இக்கழகம் அச்சடித்துள்ளது. மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கு பயன்படும் வகையில் பிரெய்லி புத்தகங்கள் கண் பார்வையற்றோருக்கான தேசிய நிறுவனம் (NIVH) மூலம் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

## 11.6. நூல்களை மொழி பெயர்த்தல் மற்றும் அச்சிடுதல்

மாணவர்கள் மேற்படிப்பை தொடரும் பொருட்டு, தேசிய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகள் மற்றும் நுழைவுத் தேர்வுகளில் பங்குபெற அவர்களுக்கு பயன்படும் வகையில் முன்னணி வெளியீட்டாளர்களான

பியர்சன் இந்தியா வெளியிட்டுள்ள 11 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல், மற்றும் உயிரியல் பாடங்களுக்கான வினா வங்கிகள் தமிழாக்கம் செய்து வெளியிடப்பட்டுள்ளன. முதுநிலை பட்டம் நிலையில் தேசிய வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கழகம் நடத்தும் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் கால்நடை மருத்துவம் மற்றும் வேளாண்மை சார்ந்த 8 தலைப்புகளிலான நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்பர் காலிங்ஸ் மற்றும் ஓரியண்ட் பிளாக் ஸ்வான் போன்ற முன்னணி வெளியீட்டாளர்களுடன் ஒருங்கிணைந்து 6 தலைப்புகளை இனங்கண்டறிந்து வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### 11.7. வெளியீடுகள்

அரிய வகை நூல்கள் வகையில் "கீழடி-வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம்" என்னும் தலைப்பிலான நூல் தொல்லியல் துறையுடன் இணைந்து

2019 இல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழில் 47,500 பிரதிகளும் ஆங்கிலத்தில் 7,500 பிரதிகளும் அச்சிடப்பட்டன.

**11.8. அரிய மற்றும் பழமை வாய்ந்த உயர்கல்வி நூல்களை எண்மயமாக்குதல்**

பழமையான 1000 உயர்கல்வி நூல்களில், இதுவரை 875 அரிய வகை நூல்கள் தமிழ் இணைய பல்கலைக் கழகம் மூலம் எண்மயமாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 635 நூல்கள் தலா 100 படிகள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில் 2019-20 ஆம் கல்வியாண்டில், ரூ.3.21 இலட்சம் மதிப்புள்ள 2,512 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 582 நூல்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றிற்கு மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் குறித்த விழிப்புணர்வை வாசகர்களுக்கிடையே ஏற்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் சென்னை புத்தகக் கண்காட்சியில் காட்சிபடுத்தப் படுகின்றன.

## 11.9. கொள்முதல் பணிகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை தக்க வைத்துக் கொள்வது மற்றும் இடைநிற்றலை தவிர்ப்பது மற்றும் அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது ஆகியவையே அரசின் முக்கியக் குறிக்கோளாகும். எனவே, உரிய கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றி 2019-20ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட விலையில்லா கல்வி உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

| வ. எண். | விலையில்லா பொருட்கள் | கொள்முதல் செய்த அளவு |
|---|---|---|
| 1. | கிரையான்ஸ் | 8,93,599 |
| 2. | வண்ணப் பென்சில்கள் | 14,91,658 |
| 3. | கணித உபகரணப் பெட்டி | 11,33,989 |
| 4. | புத்தகப்பை | 71,87,298 |
| 5. | கம்பளிச் சட்டை | 1,16,400 |
| 6. | காலுறை | 2,32,800 |
| 7. | மழைக்கால ஆடை | 1,16,400 |
| 8. | காலணி | 59,92,713 |
| 9. | உறை காலணி | 1,16,400 |
| 10. | நிலவரைபட புத்தகம் | 7,98,453 |

## 11.10. திட்டங்களுக்கான நிதி வழங்கல்

இக்கழகம் 2019-20 ஆம் கல்வியாண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு புதிய பாடத்திட்டத்தின்படி பாடபுத்தகங்கள் தயாரிக்கும் பணிக்காக ரூ.5.65 கோடி வழங்கியுள்ளது.

நூல்களை அச்சிட்டு வழங்கல் பணிக்காக மட்டும் தோற்றுவிக்கப்பட்ட இக்கழகம் பன்மடங்கு உயர்ந்து தற்பொழுது இணையதளம் மூலம் நூல்களை விற்பனை செய்தல், அரிய மற்றும் பழமை வாய்ந்த நூல்களை வெளியிடுதல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தல், நூல்களை எண்மயமாக்குதல், விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்தல் போன்ற பணிகளையும் பாராட்டும் வகையில் செய்து வருகிறது.

## 12. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43 பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2020-21 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.34,181.73 கோடியாகும்.

**2020 -21ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| | கணக்கு தலைப்பு | | மாநில செலவினங்கள் | மத்திய அரசு திட்டங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் பகுதி | | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 484.48 | | | 484.48 |
| 2059 | பொதுப் பணிகள் | | 3944.10 | | | 3944.10 |
| 2202 | பொதுக் கல்வி | | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1452505.75 | 0 | 237432.21 | 1689937.96 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1572938.04 | 0 | 93292.49 | 1666230.53 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 518.04 | 0 | 0 | 518.04 |
| | 5 | மொழி வளர்ச்சி | 1783.59 | 0.01 | 2.51 | 1786.11 |
| | **மொத்தம் - பொதுக் கல்வி** | | **3027745.42** | **0.01** | **330727.21** | **3358472.64** |
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | | 172.91 | 0 | 58.56 | 231.47 |
| 2205 | கலையும் பண்பாடும் | | 14198.69 | 0 | 0 | 14198.69 |
| 2225 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | | 17084.74 | | | 17084.74 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | | 90.00 | | | 90.00 |
| 2251 | தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள் | | 1080.31 | | | 1080.31 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிகர மொத்த வருவாய்ப் பகுதி | | 3064800.65 | 0.01 | 330785.77 | 3395586.43 |
| மூலதன செலவு பகுதி | | | | | |
| 4202 | மூலதன செலவு | 21937.99 | 0 | 530.01 | 22468.00 |
| மொத்த மூலதன பகுதி | | | | | 22468.00 |
| கடன் பகுதி | | | | | |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 29.50 | | | 29.50 |
| 7615 | பல்வகை கடன்கள் | | | | |
| மொத்த கடன் பகுதி | | | | | 29.50 |
| நிகர மொத்தம் | | 3086768.14 | 0.01 | 331315.78 | 3418083.93 |
| கூட்டுக - திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்) | | | | | 89.10 |
| | மானியக் கோரிக்கை எண். 43 இன் நிகர மொத்தம் | | | | 3418173.03 |

தமிழக அரசு மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு கல்வியில் பல்வேறு விதமான மாற்றங்கள், மிகச்சிறந்த கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள், புதுமையான திட்டங்கள் கணினி சார்ந்த எண்மயமாக்கல் உள்ளிட்ட புது முயற்சிகளை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டை உலகின் அறிவுசார் கருவூலமாக மாற்ற வேண்டும் என்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மாபெரும் தொலை நோக்கினை அடையும் முயற்சியில் அயராது பாடுபட்டு வருகிறது.

**கே.ஏ. செங்கோட்டையன்**

**பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**